**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 3668/அ4/2023, நாள்.12.09.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – சுற்றுச்சூழல் மன்றம் மற்றும் தேசிய பசுமைப்படை – செப்டம்பர் 16 – உலக ஓசோன் தினம் சார்பாக பள்ளிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்த தெரிவித்தல் – தொடர்பாக

.....

மேற்காண் பொருள் சார்ந்து பள்ளி சுற்றுச்சூழல் மன்றம் மற்றும் தேசிய பசுமைப்படை மாணவர்களின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றான உலக ஓசோன் தினம் கடைபிடித்தல், உயிர்கள் வாழ ஓசோன் அவசியம் என்பதால் , ஓசோன் படலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் "Fixing the Ozone layer and Reducing Climate change" இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

எதிர்வரும் செப்டம்பர் 16 அன்று உலக ஓசோன் தினம் அனுசரிக்கப்படுகிறது . அதை ஒட்டி வேலூர் மாவட்ட சுற்றுச் சூழல் மன்றம் மற்றும் தேசிய பசுமைப்படை சார்பாக பள்ளிகளில் ஓசோன் தினம் முன்னிட்டு இம்மாதத்தில் (செப்டம்பர்) பிளாஸ்டிக் தவிர்த்தல், காற்று மாசுபாடு , ஓசோன் படல பா திப்பு, புவி வெப்பமாகுதல் தொடர்பாக மாணவர்களிடையே விழப்புணர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளி தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் / தனியார் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

**நகல் –**
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
வேலூர் மாவட்டம். . (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)